# நிந்தவூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட அட்டப்பளப் பிரதேசத்தில் தென்னை மரத்தின் கீழ் நடப்படும் நீண்ட கால மற்றும் குறுகிய கால பயிர்கள் பற்றிய ஆய்வு

S. Rafeeka Ameerdeen[1] & K. Kuraisiya[2]

[1]Senior Lecturer, SEUSL
[2]Development Officer

**ஆய்வுச் சுருக்கம்**
உலக நாடுகள் பெருமளவில் இடப் பற்றாக்குறைக்கு முகம் கொடுத்துவரும் அதேவேளையில் இலங்கை போன்ற சிறிய நாடுகளும் இப்பிரச்சினைகளுக்கு விதிவிலக்கல்ல. இப்பிரச்சினைக்காக உலக நாடுகளால் முன்வைக்கப்பட்ட ஒரு தீர்வுதான் விவசாயக் காடாக்கம். இம்முறையில் தென்னையின் கீழ் மேற்கொள்ளப்படும் பயிர்ச்செய்கை முறையும் ஒன்றாகும். அந்தவகையில் இலங்கையின் அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள நிந்தவூர் பிரதேசத்தில் காணப்படும் அட்டப்பளப்பிரதேசத்தில் இம்முறை காணப்படுவதை அடையாளப்படுத்தி அப்பயிர்செய்கை முறை எதிர் கொள்ளும் சவால்களை மிக முக்கிய பிரச்சினையாக அடையாளப்படுத்தப்பட்டு உள்ளது. பிரதானமாக முதலாம் நிலைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வில் கத்தரி, வெண்டி, மிளகாய், பழவகைகளான பப்பாசி வாழை போன்றனவும் இவை தவிர அன்னாசி சிறியளவிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இம்முறையினை விருத்தி செய்வதற்குறிய பல்வேறு சந்தர்ப்பங்கள் இருந்தும் போதியளவிலான விருத்தி இப்பகுதியில் ஏற்படுத்தப்படவில்லை. எனவேதான் திவிநெகும போன்ற திட்டங்களில் இம்முறை பயிர்ச் செய்கைக்கான உதவிகளையும் கடன் வசதிகளையும் வழங்குவதனூடாக இம்முறைப் பயிர்ச்செய்கையினை மேலும் விருத்தி செய்யலாம்.

**Keywords:** விவசாய காடாக்கம், பயிர்ச் செய்கை, நீண்டகாலப் பயிர்.

**அறிமுகம்**
குறித்த நிலப்பரப்பில் பயிர்ச்செய்கைகளோடு மிருக வளர்ப்பையும் மேற்கொள்ளும் விவசாயக் காடாக்க முறையில் தென்னை மரத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பயிர்ச்செய்கை முறையும் ஒன்றாகும். அதாவது தென்னை மரத்தின் கீழ் குறுகிய கால, நீண்டகால பயிர்வகைகளை பயிரிடுவதைக் குறிக்கும். உதாரணமாக தென்னை மரத்தின் கீழ் மரக்கறி வகைகள், வாழை, இஞ்சி, மஞ்சள், அன்னாசி, போன்ற பல்வேறு வகையான பயிர்களை நடுவதன் மூலம் பொருளாதார மற்றும் சூழலியல் நன்மைகளை மேம்படுத்தும் ஒரு முறையாக இதனைக் குறிக்கலாம்.

**ஆய்வுப் பிரதேசம்**
நிந்தவூர் பிரதேச எல்லைகளாக,
வடக்கு - காரைதீவு பிரதேச செயலகம்.
தெற்கு - அட்டாளைச்சேனை பிரதேச செயலகம்.
கிழக்கு - வங்களா விரிகுடாக் கடல்.
மேற்கு - சம்மாந்துறை பிரதேச செயலகம்.

இதன் மொத்தப் பரப்பளவு 40.031 சதுரக் கிலோ மீற்றராகும். இப் பிரதேசம் 25 கிராம சேவகர் பிரிவுகளைக் கொண்டுள்ளது. இங்கு வாழும் மொத்த சனத்தொகை 29,569 ஆகும். இதில் முஸ்லிம்கள் 97 வீதமாகவும் ஏனைய சமயத்தவர் 3 வீதமாகவும் வாழ்ந்து வருகின்றனர். இவ்வாய்வுக்கு நிந்தவூர் பிரதேச செயலகத்திற்கு உட்டபட்ட நிந்தவூர் 10 என்ற அட்டப்பளப் பிரதேசம் மாதிரியாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. மாதிரி கிராமத்தில் அதிகமாக முஸ்லிம்கள் வாழ்ந்து வந்த போதிலும் தமிழ் மக்களே பெரும்பாலும் பயிர்ச்செய்கையினை மேற்கொள்ளுகின்றனர்.
ஆய்வுப் பிரதேசம் டிசம்பர் - பெப்ரவரி வரை வடகீழ் பருவக்காற்று மழைவீழ்ச்சியால் 1500 -2000 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியைப் பெருகின்றது இங்கு நிலவும் வெப்பநிலை சராசரியாக $27^0c$ - $30^0c$ வரை வேறுபடுகின்றது.

**ஆய்வு நோக்கம்**
- ஆய்வுப்பிரதேசத்தில் தென்னை மரத்தின் கீழ் நடப்படும் நீண்டகால மற்றும் குறுகிய காலப் பயிர்களை இனங்காணுதல்.
- இப்பயிர்களை பயிரிடும் போது விவசாயிகள் எதிர்கொள்ளும் சவால்களை அடையாளப்படுத்தல்
- அப்பிரச்சினைக்கான தீர்வுகளை முன்வைத்தல்.

**ஆய்வு முறையியல்**

ஆய்வுக்குத் தேவையான தகவல்களை முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகளினூடாகப் பெறப்பட்டுள்ளது.
முதலாம் நிலைத் தரவுகள் எனும் போது கள ஆய்வு, நேரடி அவதானம் மற்றும் அப்பகுதி மக்களுடனான குழு கலந்துரையாடல் போன்றவற்றின் மூலம் பெறப்பட்டுள்ளது. இன்னும் இவ்வாய்வுக்கு எழுமாற்று முறையிலான மாதிரி பயன்படுத்தப்பட்டுள்ளது. அதாவது அட்டப்பளப் பிரதேசத்தில் தென்னை மரத்தின் கீழ் பயிர்ச்செய்கை மெற்கொள்ளும் 10 பேரை எழுமாற்றாக தெரிவு செய்து அவர்களுக்கிடையில் நேர்காணல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
இரண்டாம் நிலைத் தரவாக பிரதேச செயலகப் புள்ளிவிபரங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.இவ்வாறு பெறப்பட்ட தரவுகள் அட்டவணைகள், வரைபடங்கள், படங்கள் மூலம் விளக்கப்பட்டுள்ளன.

**கலந்துரையாடலும் முடிவுகளும்**

**ஆய்வுப் பிரதேசத்தில் தென்னை மரத்தின் கீழ் பயிரிடப்படும் நீண்டகால, குறுகிய கால பயிர்கள்**

ஆய்வுப் பிரதேசத்தில் தென்னை மரத்தின் கீழ் வெண்டி, கத்தரி, மிளகாய், வெள்ளரிக்காய், வற்றாளைக் கிழங்கு, மரவள்ளிக் கிழங்கு, சுரக்காய், சோளம், கச்சான் பேன்ற நீண்டகால, குறுகியகால பயிர்கள் பயிரிடப்படுகின்றன. பிரதான பயிர்வகையாக,

1. கத்தரி, மிளகாய், வெண்டி:

அட்டப்பளப் பிரதேசத்தில் இப்பயிர்கள் மிகவும் பிரதானமாக நடப்படுகின்றன. இப்பயிர்களை நடுவதற்கு முன்னர் முதலில் நிலத்தை தங்களது கைகளினாலையே தயார்செய்வார்கள். ஒருசிலர் கூலிக்கு ஆட்களை அமத்தி ஒரு நாளைக்கு 750 ரூபாய் பணமும் கொடுப்பர். வருடம் முழுவதும் இப்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படும். காலையிலும் மாலையிலும் இப்பயிர்களுக்கு குழாய் கிணறுகளின் மூலமும், நீர் பம்பிகளின் மூலமும் நீர் பாய்ச்சப்படும். பயிர்கள் நடப்பட்டடு இரண்டு மாதத்தில் இருந்து அறுவடையைப் பெற முடியும். அறுவடை செய்யப்பட்ட கத்தரி, மிளகாய் என்பவை நிந்தவூர் பிரதான சந்தைக்கு கொண்டு சென்று விற்பனை செய்யப்படும். பருவத்திற்கு ஏற்ப விலையும் மாறுபடும்.

**தொற்று நோய்கள்**

பனிக்காலத்தில் பனிப் பூச்சி தொற்றும். கண்டு பிடிப்பது மிகக் கடினம். இதற்கு தீர்வாக மணம் கூடிய மருந்துகளைப் பாவிக்கலாம். உதாரணமாக சொலிசிறாம், கல்குலோண். இவை தவிர மழைகாலத்தில் இலைச் சுருட்டல் நோய் ஏற்படும்.



அதற்கான மருந்தாக டைட்டின் பவுடர், பொலியன் பயன்படுத்தப்படுகின்றது.

2. மரவள்ளி

சிறந்த நீர்வசதி இருப்பதனால் வருடம் முழுவதும் நடுகின்றனர். பயிரிட்டு 4 மாத்திற்கு பின் அறுவடை செய்து விற்பனைக்காக நிந்தவூர் சந்தைக்கு கொண்டு செல்லுகின்றனர்.



3. வாழை, பப்பாசி

வருடம் முழுவதும் சிறு அளவில் பயிரிடப்படுகின்றது. வாழைக்கு குருத்து அடைத்தல் நோய் வருவதனால் அறுவடையில் பாதிப்பு ஏற்படுகின்றது. ஆனால் பப்பாசிக்கு நோய்கள் பெரும்பாலும் தாக்குவதில்லை. கூடுதலான கன்றுகள் திவிநெகும திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளது.




**தென்னை மரத்தின் கீழ் பயிரிடப்படும் பயிர்கள் மத்தியில் பொதுவாக இனங்காணப்பட்ட பிரச்சினைகள்**

- தென்னையின் கீழ் பயிரிடப்படும் நீண்டகாலப் பயிர்களுக்கு பெரிய பிரச்சினைகள் ஏற்படுவது குறைவு ஆனால்குறுகிய காலப் பயிர்களே பாரிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றது. உதாரணமாக மரக்கறிவகை, மிளகாய்.
- விவசாயிகளுக்கிடையே போதியளவு அறிவின்மையினால் உச்ச விளைச்சலைப் பெற முடிவதில்லை.
- பயிர்செய்யும் காலகட்டத்தில் பருவம் தப்பிய மழை, வரட்சி போன்ற காலநிலைக் காரணிகளாலும் பயிர்களுக்கு பாதிப்பு ஏற்படும்.
- உரிய நேரத்தில் பசளைகள் கிடைப்பதில்லை மற்றும் அறுவடைக்கு நியாயமான விலை கிடைப்பதில்லை. இவைமட்டுமன்றி சந்தைப்படுத்தல் வசதியும் குறைவு

**தீர்வு ஆலோசனைகள்**

1. பயிர்களைத் தாக்கும் நோய்களை இனம்கண்டு அதற்கான மருந்துகளை மக்களுக்கு அறிவுறுத்தலின் பேரில் வழங்குதல்.
2. சரியான காலத்திற்கு ஏற்ற பயிர்களை மக்களுக்கு அறிவுறுத்துதலோடு புதிய இனங்களை அறிமுகப்படுத்துதல்.
3. விவசாயிகளுக்கான கடன் உதவிகளை ஊக்குவித்தல்
4. முறையான சந்தை வாய்ப்பை விவசாயிகளுக்குப் பெற்றுக் கொடுத்தல்.
5. அறுவடைக்குப் பொறுத்தமான விலையினைப் பெற்றுக் கொடுத்தல்.
6. விவசாயிகளுக்கான கருத்தரங்குகளை நடாத்துதல்

**முடிவுரை**

நிந்தவூர் பிரதேசம் நெல் உற்பத்திக்குப் பிரதானமானதாக இருந்தாலும் அட்டப்பளப் பிரதேசத்தைப் பொருத்தவரையில் தென்னை உற்பத்தியோடு இணைந்த பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் பெருமளவில் இடம்பெற்று கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இப்பிரதேசத்தில் காணப்படும் குறிப்பிட்ட நிலங்களை பிரயோசனமுள்ள விதத்தில் பயன்படுத்தும் நோக்கிலையே தொன்னையின் கீழான நீண்டகால மற்றும் குறுகிய கால பயிர்ச்செய்கைகள் இடம்பெற்ற வண்ணமுள்ளன.விவசாயக் காடக்க முறைகளில் இம்முறையும் பிரதான ஒன்றாக இருப்பதோடு இலங்கையைப் பொறுத்தவரையில் இம்முறை பிரபல்யம் வாய்ந்ததாகவும் காணப்படுகின்றது. இம்முறைப்பயிர்ச் செய்கைகள் ஆய்வுப் பிரதேசத்தில் இடம்பெற்றுக் கொண்டிருந்தாலும் அப்பயிர் செய்கைகையை மேற்கொள்ளும் விவசாயிகளின் வறுமை நிலை, போதியளவு அறிவின்மை, தொழிநுட்ட பற்றாக்குறை மற்றும் பயிர்களுக்கு எற்படும் தொற்றுக்கள் என்பன பாரிய தடையாகவும் அமைந்திருக்கின்றன. எனவேதான் ஆய்வுப் பிரதேசத்தில் தென்னை மரத்திற்கு கீழ் மெற்கொள்ளப்படும் பயிர்ச் செய்கையினை மேலும் விருத்தி செய்வதற்கான வாய்ப்புக்கள் காணப்படுவதனால் அரசாங்கத்தின் உதவி அவசியமாகக் கருதப்படுகின்றது. அதாவது விவசாயிகளை வலுவூட்டுதல் அவசியமாகின்றது.

**உசாதுணை நூல்கள்**

Benneh, George. 1987. "Land Tenure and Agroforestry Land Use Systems in Ghana," in John Raintree (ed.) Land, Trees, and Tenure. Madison: University of Wisconsin Press, pp. 163-168.

Bergeret, Anne. 1993. "Discours et politiques forestières coloniales en Afrique et à Madagascar," Revue Française d'Histoires d'Outre-Mer 79(298): 23-47.

Brokensha, David and Bernard W. Riley. 1987. "Privatization of Land and Tree Planting in Mbeere, Kenya," in John Raintree (ed.) Land, Trees, and Tenure. Madison: University of Wisconsin Press, pp. 187-192.

Bruce, John and Louise Fortmann. 1988. "Why Land Tenure and Tree Tenure Matter: Some Fuel for Thought," in Louise Fortmann and John W. Bruce (eds.) Whose Trees? Proprietary Dimensions of Forestry. Boulder: Westview Press, pp. 1-9.